©
தமிழ்நாடு அரசு
2023

பதிவெண் : எம்.

# திருவண்ணாமலை மாவட்ட அரசிதழ்
## சிறப்பு வெளியீடு

ஆணையின்படி வெளியிடப்பட்டது

திருவண்ணாமலை, சனிக்கிழமை, ஏப்ரல் 15, 2023.

எண் 4 ] சித்திரை 2, சோபகிருது, திருவள்ளுவர் ஆண்டு 2054.

## உள்ளாட்சித்துறை அறிவிக்கை

ந.க.எண். டி1/34362/2022, நாள் : 27-03-2023

ந.க.எண். 2543/2022/எச்1, நாள் : 21-03-2023

திருவத்திபுரம் நகராட்சி, திருவண்ணாமலை மாவட்டம்.

**திருவத்திபுரம் நகராட்சி நகர்மன்ற தீர்மான எண்.87 நாள்: 27-12-2022–ன்படி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920–ன்படி அபாயகரமானதும் அருவருக்கத்தக்கதுமான தொழில் இணங்களின் உரிமையாணை கட்டண விகிதங்கள் வசூலிப்பது குறித்து இயற்றப்பட்ட துணை விதிகள் குறித்த அறிவிக்கை.**

**தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920–ன்படி இயற்றப்பட்ட துணை விதிகள்**

1. இந்த விளம்பரம் இதற்கு முன்பு இப்பொருள் குறித்து வெளியிடப்பட்ட எல்லா விளம்பரங்களும் ரத்து செய்யப்பட்டு இதன் மூலம் விளம்பரம் செய்யப்பட்டிருக்கிறது. இதன்படி இந்த நகராட்சி எல்லைக்குள் இருக்கும் இடங்களை இத்துடன் இணைக்கப்பட்டிருக்கும் அனுபந்தத்தில் கண்ட ஒன்று அல்லது பல தொழில்களுக்காக நிர்வாக அதிகாரியிடமிருந்து உரிமை ஆணை அனுமதி பெறாமல் உபயோகப்படுத்தக் கூடாது. உரிமை ஆணை அனுமதி பெறுவது சம்பந்தமான கட்டண விகிதங்கள் சட்டத்தின் கீழ் பல்வேறு பிரிவுகள் பிரகாரம் இத்துடன் இணைக்கப்பட்டிருக்கும் அனுபந்தத்தில் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. இந்த கட்டண விகிதங்கள் விளம்பரப்படுத்தப்பட்ட 01-04-2023 முதல் அமுலுக்கு வரும்.

2. மேற்கூறிய காரியங்களில் அதற்காகிலும் ஓரிடத்தை நிதி வருடம் ஒன்றுக்காவது அல்லது ஒரு வருடத்தின் பாகத்திற்காவது உபயோகிக்க விரும்பும் எவரும் (சொந்தக்காரர் அல்லது அனுபோகதாரர்) அக்காரியத்திற்காக அவ்விடத்தில் உபயோகித்துக்கொள்ள உரிமை ஆணை அனுமதி / கொடுக்குமாறு திருவத்திபுரம் நகராட்சி நிர்வாக அதிகாரிக்கு எழுத்து மூலமாய் மனு செய்து கொண்டு அம்மனுவுடன் அதற்குரிய கட்டணத் தொகையையும் முன் பணமாகச் செலுத்த வேண்டும்.

3. நிர்வாக அதிகாரி தனக்கு உசிதமாகத் தோன்றுகிறபடி நிபந்தனைகளும், தடைகளும் கொண்ட ஓர் உத்திரவினால் உரிமை ஆணை / அனுமதி கொடுக்கலாம் அல்லது மறுக்கலாம்.

4. ஒவ்வொரு உரிமை ஆணை அனுமதியும் / நிதி வருட இறுதியில் அல்லது அனுமதி உத்திரவில் குறிப்பிட்டுள்ள தேதி முடிவடையும். ஆனால் முன்பே ஓர் தேதியில் முடிவடைய வேண்டுமென்று நிர்வாக அதிகாரியால் பிரத்யேகக் காரணங்களைக் கொண்டு எழுத்து மூலம் உத்திரவிடப்பட்டால் அந்த உரிமை ஆணை அனுமதி நிர்வாக அதிகாரி குறிப்பிட்ட முந்தைய தேதியில் முடிவடையும்.

5. (அ) எந்த காரணத்திற்காக உரிமை ஆணை அனுமதி வேண்டுமென்று கேட்கப்படுகிறதோ அதற்காக அவ்விடத்தை உபயோகித்துக் கொள்வதற்கு குறைந்தது 30 (முப்பது) நாட்களுக்கு முன்னரும், 90 (தொண்ணூறு) நாட்களுக்கு முற்படாமலும் எழுத்து மூலம் மனு செய்து கொள்ள வேண்டும். அவ்விதமே உரிமை ஆணை அனுமதியையும் புதுப்பித்துக்கொள்வதற்கும் எழுத்து மூலமாய் வாங்கப்பட்ட உரிமை ஆணை முடிவடைவதற்கு 30 (முப்பது) நாட்களுக்கு முன்னரும், 90 (தொண்ணூறு) நாட்களுக்கு முற்படாமலும் மனு செய்து கொள்ள வேண்டும்.

(ஆ) காலம் கடந்து வரும் ஒவ்வொரு மனுவுக்கும் (முதல் முறை உரிமை ஆணை பெறுவதானாலும் சரி பழைய உரிமை ஆணை புதுப்பித்துக் கொள்வதானாலும் சரி) சாதாரணமாக உள்ள உரிமை ஆணை கட்டணத் தொகையில் (25%) இருபத்தைந்து சதவீதம் அளவுள்ள கட்டணத் தொகை கூடுதலாக வசூலிக்கப்படும். இந்த கூடுதலான கட்டணத் தொகையையும், சாதாரண உரிமை ஆணை கட்டணத் தொகையுடன் சேர்த்து உரிமை ஆணை மனு சமர்ப்பிக்கும் பொழுது செலுத்தியாக வேண்டும்.

6. உரிமை ஆணைதாரர் எல்லா விதமான உரிமை ஆணை நிபந்தனைகளுக்கும் விதிகளுக்கும் மற்றும் தற்பொழுது ஏற்படுத்தப்பட்டு அமுலில் இருக்கும் விதிகளுக்கும் (ரூல்ஸ்) சகாய சட்டங்களுக்கும் (பை–சட்டம்) இனி ஏற்படுத்தப்போகும் விதிகளுக்கும் (ரூல்ஸ்) சகாய சட்டங்களுக்கும் (பை–சட்டம்) இது சம்பந்தமாக நகராட்சியால் அறிவிக்கப்படும் சகல விதமான விளம்பரங்களுக்கும் திருவத்திபுரம் நகராட்சி அதிகாரியின் உத்திரவுகளுக்கும் கட்டுப்பட்டு நடந்து கொள்ள வேண்டும். உரிமை ஆணை நிபந்தனைகளிலிருந்து விதிகளையும் மற்றும் நிர்வாக அதிகாரியின் உத்திரவுகளை மீறினாலும் உரிமை ஆணை ரத்து செய்யப்படுவதுடன் செலுத்தப்பட்ட கட்டணத் தொகையையும் பறிமுதல் செய்யப்படும்.

7. உரிமை ஆணை கண்டிப்பாக வேறொருவருக்கு மாற்றப்படத்தக்கதல்ல. ஒரு தொழிலின் உரிமையாளர் சொந்தக்காரர் அல்லது இடம் இவற்றில் எந்த மாற்றமும் ஏற்படுமாயின் அது ஒரு புதுத்தொழிலாகவே கருதப்படும்.

8. ஒன்றுக்கு மேற்பட்ட காரியங்களுக்கு ஒரே இடம் உபயோகிக்கப்படும் பட்சத்தில் தனித்தனியாக ஒவ்வொரு காரியத்திற்கும் உரிமை ஆணை எடுத்தால் எவ்வளவு கட்டணம் செலுத்த வேண்டுமோ அந்த மொத்தத் தொகையும் வசூலிக்கத்தக்கதாகும்.

9. திருவத்திபுரம் நகராட்சி நிர்வாக அதிகாரியால் கீழே கண்ட காரியங்களில் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட காரியங்களுக்காக கொடுக்கப்படும் உரிமை ஆணை பெறாமல் ஓர் இடத்தை யார் உபயோகித்தாலும் அவர் மீது வழக்குத் தொடரப்படும்.

10. கீழ் குறிக்கப்பட்ட அரசாங்க உத்திரவிற்கிணங்க கோர்ட்டில் வழக்கு போட்டு வழக்குகள் திரும்பப்பெறுதலுக்கு விதிக்கப்படும் இணக்கத்தொகை கட்டணம் (Compounding fees) அந்தந்த வழக்கு சம்மந்தமான குற்றங்களுக்கு தக்கவாறு நிர்வாக அதிகாரி அவர்களால் நிர்ணயிக்கப்படும்.

அரசு ஆணை எண்.3498, உள்ளாட்சித் துறை, நாள்:06-09-1939
ந.க.எண்.2416 சுகாதாரம் நாள்:04-07-1950
அரசு மெமோ எண்.13363/55-3ல் எல்2 நாள்:21-05-1956

11. இந்த நிர்ணயிக்கப்பட்டுள்ள கட்டண விகிதங்கள் சம்மந்தமாக எழும் சந்தேகங்களுக்கும், சிக்கல்களுக்கும் நிர்வாக அதிகாரியின் தீர்மானமே முடிவானதாகும்.

குறிப்பு:

(அ) நிதி வருடம் என்பது ஒவ்வொரு வருடம் ஏப்ரல் மாதம் முதல் தேதியில் ஆரம்பித்து மறு வருடம் மார்ச் மாதம் முப்பத்து ஒன்றாம் தேதியில் முடிவடைவதாகும்.

(ஆ) உரிமை ஆணை பெறுவதற்கான மனுவானது, மனுவும் மொத்த உரிமை ஆணை கட்டணத் தொகையும் சேர்த்து செலுத்தும்போது தான் முழு உருப்பெற்றதாகும்.

(இ) உரிமை ஆணை கட்டணத்துடன் உரிமை ஆணை மனு நகராட்சி அலுவலகத்தில் வந்து சேரும் தேதியைத்தான் மனுவின் தேதியாகக் கொள்ளப்படும்.

**தீர்மானம்:**

திருவத்திபுரம் நகரமன்றத்தின் அபாயகரமானதும், அருவருக்கத்தக்கதுமான தொழிலின் கீழ்கண்ட கட்டண விகிதங்கள் 27.12.2022ஆம் தேதிய 87–வது தீர்மானத்தில் கீழ்கண்டவாறு கட்டண விகிதங்கள் திருத்தியமைக்க தீர்மானிக்கப்பட்டது.

| வ. எண். | எந்த தொழில் நடத்துவதற்காக உரிமை ஆணை கட்டணம் விதிக்கப்பட்டு இருக்கிறது என்ற விவரம் | பழைய கட்டண விகிதம் | தற்போது திருத்தியமைக்கப்பட்ட கட்டணங்கள் |
|---|---|---|---|
| 1. | காற்று ஊட்டப்பட்ட நீர் சோடா, கலர் பாணங்கள் தயாரிப்பு & விற்பனை | | |
| | (அ) கையால் இயங்கும் இயந்திரங்களை உபயோகித்தல் | 100.00 | 200.00 |
| | (ஆ) மின்சார சக்தியால் இயங்கக்கூடிய இயந்திரங்களை உபயோகித்தல் | 150.00 | 300.00 |
| 2. | நெல் வேக வைப்பது (சொந்த உபயோகம் அல்லது மற்ற காரியங்களுக்கு)அடுப்பு 1–க்கு | 100.00 | 200.00 |
| | (அ) கற்பூரம் காய்ச்சுதல் | 100.00 | 200.00 |
| | (ஆ) கற்பூரம் சேகரித்தல், விற்பனை செய்தல் | 50.00 | 100.00 |
| 3. | (அ) கொழுப்பு அல்லது கந்தகம் உருக்குதல் | 75.00 | 150.00 |
| | (ஆ)வனஸ்பதி தயாரிப்பது | 100.00 | 200.00 |
| 4. | செயற்கை உரம் சேகரித்தல் அல்லது | | |
| | (அ) வேறு வகை செய்தல் | 200.00 | 400.00 |
| | (ஆ)எலும்பு சேகரித்தல் அல்லது வேறு வகை செய்தல் | 200.00 | 400.00 |
| | (இ) (Rags)கழிவுப்பொருட்கள் முதலியன சேகரித்தல் அல்லது வேற வகை செய்தல் | 50.00 | 100.00 |
| | (ஈ) உப்பு தோல் (அ) தோல் சேகரித்தல் (அ) வேறுவகை செய்தல் | 200.00 | 400.00 |
| 5. | கம்பளி மயிர் உலர்த்துதல், சுத்தம் செய்தல் அல்லது சேகரித்து வைத்தல் | 100.00 | 200.00 |
| 6. | மீன் எண்ணெய் தயாரித்தல் | 100.00 | 200.00 |
| 7. | (அ) சோப்பு தயாரித்தல் | | |
| | 1. இயந்திரம் இல்லாமல் | 100.00 | 200.00 |
| | 2. இயந்திரம் உபயோகத்துடன் | 150.00 | 300.00 |
| | (ஆ) சாயம் தோய்த்தல் | | |
| | 1. இயந்திரம் இல்லாமல் | 100.00 | 200.00 |
| | 2. இயந்திரம் உபயோகத்துடன் | 250.00 | 500.00 |
| | (இ) எண்ணெய் பிழிதல் அல்லது கொதிக்க வைத்தல் | 150.00 | 300.00 |
| | (ஈ) மண்பாண்ட சூளை போடுதல் | 50.00 | 100.00 |

| | | | |
|---|---|---|---|
| | 1. சுண்ணாம்பு தயாரித்தல் & விற்பனை<br>2.செங்கல் ஓடு தயாரித்தல் மற்றும் சூளை போடுதல் | 200.00<br>250.00 | 400.00<br>500.00 |
| 8. | (அ) பீடி, சிகார், சிகரெட் மொத்த விற்பனை<br>(ஆ)பீடி, சிகார், சிகரெட் சில்லரை விற்பனை<br>(இ) பீடி, சிகார், சிகரெட் தயாரித்தல் | 150.00<br>100.00<br>200.00 | 300.00<br>200.00<br>400.00 |
| 9. | துப்பாக்கி வெடி மருந்து பட்டாசு, வானம் தயாரித்தல்<br>(அ) குடிசைத் தொழில்<br>(ஆ)குடிசைத் தொழில் அல்லாதவை<br>(இ) தீப்பெட்டி தொழிற்சாலை<br>(ஈ) தீப்பெட்டி தயாரித்தல் (குடிசைத் தொழில்)<br>(உ) பட்டாசு, (மத்தாப்புகள்) மொத்த விற்பனை<br>(ஊ)சில்லறை விற்பனை | <br>75.00<br>150.00<br>400.00<br>200.00<br>300.00<br>150.00 | <br>150.00<br>300.00<br>800.00<br>400.00<br>600.00<br>300.00 |
| 10. | (அ)காபி அல்லது டீ மட்டும் விற்பனை செய்தல்<br>(ஆ)காபி அல்லது டீ சிற்றுண்டியுடன்<br>(இ) ஓட்டல், ரெஸ்ட்டாரண்ட் உணவு விடுதி, காபி விடுதி, உணவு விடுதியுடன் கூடியது (உணவு) என்பது தயிர் சாதம், புளி சாதம் மற்றும் இதர சாதம் சேர்த்து | 100.00<br>200.00<br>300.00 | 200.00<br>400.00<br>600.00 |
| 11. | 20 அல்லது அதற்கு மேற்பட்ட வெள்ளாடு அல்லது செம்மறி ஆடு வைத்திருந்தால் 10 அல்லது அதற்கு மேற்பட்ட பன்றி அல்லது மாடு வைத்திருந்தால் | 100.00 | 200.00 |
| 12. | (அ) மாவு அல்லது மாவு பண்டங்கள் அல்லது இனிப்பு பண்டங்கள் தயாரித்தல், விற்பனை செய்தல்<br>(ஆ) மாவினால் செய்த இனிப்பு அற்ற பலகாரங்கள்<br>(இ) ரொட்டி, பிஸ்கட் அல்லது பெப்பர்மிட் தயாரித்தல், விற்பனை செய்தல் | 150.00<br>50.00<br>150.00 | 300.00<br>100.00<br>300.00 |
| 13. | பீர், சாராயம் அல்லது ஆல்கஹால் கொண்டுள்ள இதர ஸ்பிட்டுகள் தயாரித்தல், விற்பனை செய்தல் | 400.00 | 800.00 |
| 14. | (அ) மரம் சேகரித்தல் விற்பனை செய்தல்<br>(ஆ) விறகு கட்டை சேகரித்தல், விற்பனை செய்தல்<br>(இ) மூங்கில் ஓலை முதலிய கூரை கட்டிட சாமான்கள் சேகரித்தல்<br>(ஈ) வைக்கோல், புல், கூளம் சேகரித்தல் (அ) விற்பனை செய்தல்<br>(உ) நார், நாரினால் செய்யப்பட்ட பொருட்கள் சேகரித்தல், விற்பனை செய்தல்<br>(ஊ) கரி அல்லது நிலக்கரி சேகரித்தல் அல்லது விற்பனை செய்தல் | 400.00<br>200.00<br>150.00<br>100.00<br>100.00<br>150.00 | 800.00<br>400.00<br>300.00<br>200.00<br>200.00<br>300.00 |

| | | | |
|---|---|---|---|
| 15. | தானியம், அரிசி, வேர்கடலை, புளி, மிளகாய், தேங்காய், வெல்லம், பருப்பு வகைகள், மாவு, தவிடு பொருட்கள், பழ வகைகள், காய்கறிகள் ஆகியவற்றை ஒன்றையோ அல்லது பலவற்றையோ மொத்தமாகவோ அல்லது சில்லறையாகவோ விற்பனை செய்தல் அல்லது விற்பனைக்காகவே அல்லது சொந்த உபயோகத்திற்கல்லாத வேற காரியங்களுக்காகவோ மொத்தம் அல்லது சில்லரையாக சேர்த்து வைத்தல். | | |
| | (அ) வருமான வரி கட்டக்கூடிய மளிகை கடைகளுக்கு | 250.00 | 500.00 |
| | (ஆ) விற்பனை வரி செலுத்தக் கூடிய மளிகை கடைகளுக்கு | 150.00 | 300.00 |
| | (இ) வருமாணம் மற்றும் விற்பனை வரி ஏதும் செலுத்தாத மளிகை கடைகளுக்கு | 100.00 | 200.00 |
| 16. | பதனீர் இறக்குபவர்களாவது மரங்களில் அனுபோகதாரர்களாவது அவர்களுக்கு சொந்த இடத்திலேயே குடிசை தொழிலாக செயல்படுவது அல்லாமல் வேறு விதமாக வெல்லம், கற்கண்டு அல்லது வெல்லப்பாகு தயார் செய்தல் | 150.00 | 300.00 |
| 17. | (அ) மருந்துக் கடை அல்லாத மற்ற இடத்தில் ஸ்பிரிட் சேமித்து வைத்தல் | 150.00 | 300.00 |
| | (ஆ) மருந்துக்கடையில் ஸ்பிரிட் சேமித்து வைத்தல் | 150.00 | 300.00 |
| | (இ) கந்தகம் அல்லது பொட்டாசியம் குளோரைடு வியாபாரத்திற்காக சேமித்து வைத்தல் | 200.00 | 400.00 |
| | (ஈ) வார்னிஸ் தயாரித்தல் | 200.00 | 400.00 |
| | (உ) மண்ணெண்ணெய் சேமித்து வைத்தல், விற்பனை செய்தல் | | |
| | 1. 50 லிட்டருக்கு மேற்படாதது | 150.00 | 300.00 |
| | 2. 50 லிட்டருக்கு மேற்பட்ட 250 லிட்டருக்கு மேற்படாதது | 100.00 | 200.00 |
| | 3. 250 லிட்டருக்கு மேற்பட்டது | 250.00 | 500.00 |
| | (ஊ) போட்டோ பிலிம்கள் அல்லது மற்ற பிலிம்கள் சேமித்து வைத்தல் (தியேட்டர்) | 50.00 | 100.00 |
| | (எ)தங்கம், வெள்ளி, பித்தளை உருக்குதல், நீட்டுதல் (அ) முலாம் பூசுதல் | 150.00 | 300.00 |
| | (ஏ) வல்கனைசிங் வேலைகள் செய்வது | 100.00 | 200.00 |
| | (ஐ) டயர் புதுப்பித்தல் | 250.00 | 500.00 |
| | (ஒ) வெல்டிங் (அ) லேத் வேலைகள் செய்வது | 150.00 | 300.00 |

| | | | |
|---|---|---|---|
| 18. | (அ) பருத்தியை மொத்த விற்பனைக்கு சேமித்து வைப்பது (அ) நூல் நூற்பது | 200.00 | 400.00 |
| | (ஆ) பருத்தி (அ) பஞ்சியை சில்லரை விற்பனைக்காக சேமித்து வைத்திருத்தல் | 100.00 | 200.00 |
| 19. | அபாயமும் அருவருட்பம் தரத்தக்க நாற்றம் வரக்கூடிய எந்த வகையையும் தயார் செய்தல் | 100.00 | 200.00 |
| 20. | இயந்திரங்களை (அ) மின்சார விசையினால் இன்றி மற்ற விசையினால் ஓட்டப்படும் இயந்திரங்களை தொழில் காரியங்களுக்காக உபயோகப்படுத்துதல் | | |
| | (1)மின்சார விசையினால் ஓட்டப்படும் இயந்திரங்கள் | | |
| | 1. மற்ற காரியங்களுக்கு ஒரு குதிரை வேகத்திற்கு மேற்படாமல் உள்ள இயந்திரங்கள் | 75.00 | 150.00 |
| | 2. ஒரு குதிரை வேகத்திற்கு மேற்பட்டு 5 குதிரை வேகத்திற்கு மேற்படாதது | 100.00 | 200.00 |
| | 3. 5 குதிரை வேகத்திற்கு மேற்பட்டு 10 குதிரை வேகத்திற்கு மேற்படாதது | 200.00 | 400.00 |
| | 4. 10 குதிரை வேகத்திற்கு மேற்பட்டு 20 குதிரை வேகத்திற்கு மேற்படாதது | 300.00 | 600.00 |
| | 5. 20 குதிரை வேகத்திற்கு மேற்பட்டு 30 குதிரை வேகத்திற்கு மேற்படாதது | 400.00 | 800.00 |
| | 6. 30 குதிரை வேகத்திற்கு மேற்பட்டு 40 குதிரை வேகத்திற்கு மேற்படாதது | 500.00 | 1000.00 |
| | 7. 40 குதிரை வேகத்திற்கு மேற்பட்டு 50 குதிரை வேகத்திற்கு மேற்படாதது | 600.00 | 1200.00 |
| | 8. 50 குதிரை வேகத்திற்கு மேற்பட்டு 100 குதிரை வேகத்திற்கு மேற்படாதது | 700.00 | 1400.00 |
| | 9. 100 குதிரை வேகத்திற்கு மேற்பட்டு 200 குதிரை வேகத்திற்கு மேற்படாதது 100 குதிரை வேகத்திற்கு ரூ.1400ம் அதற்கு மேல் ஒவ்வொரு குதிரை வேகத்திற்கும் ரூ.50. | | |
| | 10. 200 குதிரை வேகத்திற்கு மேற்பட்டு 500 குதிரை வேகத்திற்கு மேற்படாதது 200 குதிரை வேகத்திற்கு ரூ.2000ம் அதற்கு மேல் ஒவ்வொரு குதிரை வேகத்திற்கும் ரூ.50. | | |
| | 11. 500 குதிரை வேகத்திற்கு மேற்பட்டது 500 குதிரை வேகத்திற்கு ரூ.2000ம் அதற்கு மேல் ஒவ்வொரு குதிரை வேகத்திற்கும் ரூ.50–ம் அதிகபட்சம் ரூ.5000/– | | |

| | | | |
|---|---|---|---|
| | (2) மின்சார விசையினால் இன்றி மற்ற விசையினால் ஓட்டப்படும் இயந்திரங்கள் (அதாவது ஆயில் என்ஜின், ஸ்டீம் என்ஜின் முதலியன) | | |
| | 1. வீட்டு காரியங்களுக்காக 2 குதிரை வேகத்திற்கு மேல் நிறுவனம் செய்தல் | 30.00 | 60.00 |
| | 2. மற்ற காரியங்களுக்கு ஒரு குதிரை வேகத்திற்கு மேற்படாதது | 50.00 | 100.00 |
| | 3. ஒரு குதிரை வேகத்திற்கு மேற்பட்டு 5 குதிரை வேகத்திற்கு மேற்படாதது | 70.00 | 140.00 |
| | 4. 5 குதிரை வேகத்திற்கு மேற்பட்டு 10 குதிரை வேகத்திற்கு மேற்படாதது | 150.00 | 300.00 |
| | 5. 10 குதிரை வேகத்திற்கு மேற்பட்டு 20 குதிரை வேகத்திற்கு மேற்படாதது | 200.00 | 400.00 |
| | 6. 20 குதிரை வேகத்திற்கு மேற்பட்டு 30 குதிரை வேகத்திற்கு மேற்படாதது | 250.00 | 500.00 |
| | 7. 30 குதிரை வேகத்திற்கு மேற்பட்டு 40 குதிரை வேகத்திற்கு மேற்படாதது | 300.00 | 600.00 |
| | 8. 40 குதிரை வேகத்திற்கு மேற்பட்டு 100 குதிரை வேகத்திற்கு மேற்படாதது | 350.00 | 700.00 |
| | 9. 100 குதிரை வேகத்திற்கு மேற்பட்டு 200 குதிரை வேகத்திற்கு மேற்படாதது 100 குதிரை வேகத்திற்கு ரூ.800-ம் அதற்கு மேற்பட்ட ஒவ்வொரு குதிரை வேகத்திற்கும் ரூ.50/-ம் | | |
| | 10. 200 குதிரை வேகத்திற்கு மேற்பட்டு 500 குதிரை வேகத்திற்கு மேற்படாதது 200 குதிரை வேகத்திற்கு ரூ.1200-ம் அதற்கு மேற்பட்ட ஒவ்வொரு குதிரை வேகத்திற்கும் ரூ.50/-ம் | | |
| | 11. 500 குதிரை வேகத்திற்கு மேற்பட்டது 500 குதிரை வேகத்திற்கு ரூ.2000-ம் அதற்கு அதற்கு மேற்பட்ட ஒவ்வொரு குதிரை வேகத்திற்கும் ரூ.50/-ம் அதிகபட்சம் ரூ.3000-ம் | | |
| | (3) மின்சாரம் அல்லது இதர சக்தியினால் ஓட்டப்படும் இயந்திரங்களை நிறுவனங்களில் ஸ்தாபனம் செய்ய | | |
| | 1. குளிர் சாதனப்பெட்டி | 100.00 | 200.00 |
| | 2. கல் உடைக்கும் ஹல்லர், கல் உடைக்கும் மீட்டர் | 100.00 | 200.00 |
| | 3. அரிசி அல்லர் 1-க்கு | 150.00 | 300.00 |
| | 4. ஷேக்கர் 1-க்கு | 100.00 | 200.00 |
| | 5. மாவு அல்லர் 1-க்கு | 100.00 | 200.00 |

| | | | | |
|---|---|---|---|---|
| | | 6. மிளகாப் அல்லர் 1-க்கு | 100.00 | 200.00 |
| | | 7. சீயக்காய் அல்லர் 1-க்கு | 100.00 | 200.00 |
| | | 8. காபி கிரைண்டர் 1-க்கு | 100.00 | 200.00 |
| | | 9. காபி வறுக்கும் அல்லர் 1-க்கு | 100.00 | 200.00 |
| | | 10. டிகார் டீகேட்டர் 1-க்கு (அ) டிஸ்ண்டிகேட்டர் 1-க்கு | 100.00 | 200.00 |
| | | 11. ரோட்டரி 1-க்கு | 100.00 | 200.00 |
| | | 12. எக்ஸ்பெல்லர் 1-க்கு | 100.00 | 200.00 |
| | | 13. ஆயில் எக்ஸ்பெல்லர் 1-க்கு | 100.00 | 200.00 |
| | | 14. பின்டோ 1-க்கு (அ) செக்கு 1-க்கு | 150.00 | 300.00 |
| | | 15. ஸ்ரூல் கட்டர் 1-க்கு | 100.00 | 200.00 |
| | | 16. லேத் 1-க்கு | 100.00 | 200.00 |
| | | 17. அச்சு இயந்திரம் 1-க்கு (சாதாரணம்) | 100.00 | 200.00 |
| | | 18. மரம் அறுப்பு மில் | 150.00 | 300.00 |
| | | 19. கிரைண்டிங் ஸ்டோன் 1-க்கு | 100.00 | 200.00 |
| | | 20.பில்டல் பிரஸ் 1-க்கு (சாதாரணம்) | 150.00 | 300.00 |
| | | 21. ஆயில் பம்ப் 1-க்கு | 100.00 | 200.00 |
| | | 22.டிரில்லிங் மிஷின் 1-க்கு | 100.00 | 200.00 |
| | | 23. ஜெனரேட்டர் 2.50 கெ.வி.எ | 100.00 | 200.00 |
| | | 24. 50 கே.வி.எ.ஜெனரேட்டர் 1-க்கு | 100.00 | 200.00 |
| | | 25.வைண்டிங் டிவிஸ்டிங் மிஷின் ஒவ்வொன்றுக்கும் | 150.00 | 300.00 |
| | | 26. ஷைல்லர் 1-க்கு | 100.00 | 200.00 |
| | | 27.ஆக்ரோ (பருப்பு உடைத்தல்) 1-க்கு | 100.00 | 200.00 |
| | | 28.ஆஷா (ஷைனிங்) 1-க்கு | 100.00 | 200.00 |
| | | 29.தொழிற்சாலை முறையில் எந்த வஸ்தாவது தயார் செய்வதின் காரணமாக மனித வாழ்க்கைக்கு உடல் நலத்திற்கோ, சொத்துக்களுக்கோ சேதம் உண்டாக்கக் கூடிய இடங்களுக்கு | 100.00 | 200.00 |
| | | 30.(அ) தனிப்பட்ட வதை சாலைகளுக்கு | 100.00 | 200.00 |
| | | (ஆ) வதை சாலையில் பிராணிகளை வதை செய்தல் | 50.00 | 100.00 |
| | | 31. சிமெண்டினாலான பூவேலைகள் செய்தல் | 100.00 | 200.00 |
| | | 32.மெழுகுவர்த்தி தயார் செய்தல் | 50.00 | 100.00 |
| | | 33.கோணிப்பை சேகரித்து வைத்தல் (அ) வேறுவகை செய்தல் | 100.00 | 200.00 |
| | | 34.ஐஸ் தயாரித்தல், சேமித்தல் (அ) வேறுவகை செய்தல் | 150.00 | 300.00 |
| | | 35.புகையிலை சேர்த்து வைத்தல் (அ) விற்பனை செய்தல் | | |
| | | (அ) மொத்த விற்பனை | 300.00 | 600.00 |

தி.மா.அ.சி.வெ.எண். 4-3 முடிவு.

| | | | |
|---|---|---|---|
| | (ஆ) சில்லரை விற்பனை | 100.00 | 200.00 |
| | 36. (அ) சில்லரையில் தெருவில் கூடையில் தூக்கி பால் மற்றும் பாலினால் செய்யப்பட்ட பொருள்கள் விற்பனை செய்தல் | 50.00 | 100.00 |
| | (ஆ) சில்லரையில் தெருவில் சைக்கிள் (அ) வண்டியில் பாரம் வைத்து பால் மற்றும் பாலினால் செய்யப்பட்ட பொருட்கள் விற்பனை செய்தல் | 100.00 | 200.00 |
| | (இ) நிரந்தரமாக ஒரு இடத்தில் பால் மற்றும் பாலினால் செய்யப்பட்ட பொருள்களை விற்பனை செய்தல் | 150.00 | 300.00 |
| | 37. நகராட்சி மார்க்கெட்டிற்குள் மாமிசம், மீன் சேகரித்து வைத்தல் (அ) விற்பனை செய்தல் | 100.00 | 200.00 |
| | 38. (அ) சூடான பால் ரொட்டியுடனோ ரொட்டி இல்லாமலோ விற்பனை செய்தல் | 100.00 | 200.00 |
| | (ஆ)வியாபாரத்திற்காக ஓரிடத்தில் பால் சேகரித்து அனுப்பும் இடத்திற்கு | 100.00 | 200.00 |
| | 39. உலோக பாத்திரங்கள் தயாரித்தல் (அ) விற்பனை செய்தல் | 100.00 | 200.00 |
| | 40.பேட்டரி சார்ஜ் செய்தல் | 100.00 | 200.00 |
| | 41.அப்பளம், ஊறுகாய் தயாரித்தலும் விற்பனையும் (மொத்தமாக) | 50.00 | 100.00 |

| | 42.தங்கும் விடுதி சாப்பாடு வசதி இல்லாதது | தற்பொழுது கட்டணம் | | திருத்திய கட்டணம் | |
|---|---|---|---|---|---|
| | | சாப்பாடு வசதி இல்லாதது | சாப்பாடு வசதியுடன் | சாப்பாடு வசதி இல்லாதது | சாப்பாடு வசதியுடன் |
| | (அ) மாத வாடகை மதிப்பு ரூ.200/-ம் அதற்கு குறைவாக உள்ளது | 100.00 | 200.00 | 200.00 | 400.00 |
| | (ஆ) மாத வாடகை மதிப்பு ரூ.200/-க்கு மேல் ரூ.500-வரை | 150.00 | 300.00 | 300.00 | 600.00 |
| | (இ) மாத வாடகை மதிப்பு ரூ.500/-க்கு மேல் ரூ.1000-வரை | 200.00 | 500.00 | 400.00 | 1000.00 |
| | (ஈ) மாத வாடகை மதிப்பு ரூ.1000/-க்கு மேல் ரூ.2000-வரை | 300.00 | 600.00 | 600.00 | 1200.00 |
| | (உ) மாத வாடகை மதிப்பு ரூ.2000/-க்கு மேல் ரூ.4000-வரை | 500.00 | 1000.00 | 1000.00 | 2000.00 |
| | (ஊ)மாத வாடகை மதிப்பு ரூ.4000/-க்கு மேல் | 600.00 | 1200.00 | 1200.00 | 2400.00 |

| | | | |
|---|---|---|---|
| | 43.விடியோ நூல் நிலையம் | 200.00 | 400.00 |
| | 44.மின் சாதனங்கள் விற்பனை செய்தல் | 200.00 | 400.00 |

| | | | |
|---|---|---|---|
| | 45.பவர்லூம் 1-க்கு | 100.00 | 200.00 |
| | 46.நூல் சுற்றும் இயந்திரம் | 100.00 | 200.00 |
| | 47.தார் சுற்றும் இயந்திரம் | 100.00 | 200.00 |
| | 48. பாவு ஓடும் இயந்திரம் | 150.00 | 300.00 |
| | 49.டீசல் மற்றும் பெட்ரோல் சேகரித்தல் மற்றும் விற்பனை | 300.00 | 600.00 |
| | 50.முட்டை சேகரித்தல் மற்றும் விற்பனை | 100.00 | 200.00 |
| | 51.மட்டன் மற்றும் சிக்கன் விற்பனை | 150.00 | 300.00 |
| | 52.தச்சுப் பணிகள் | 100.00 | 200.00 |
| | 53.கேஸ் வெல்டிங் (எ) ஆர்க் வெல்டிங் | 100.00 | 200.00 |
| | 54.ஸ்டீல் பீரோ, சேர், நாற்காலி போன்ற பொருள்கள் தயாரித்தல் மற்றும் விற்பனை | 200.00 | 400.00 |
| | 55. உர விற்பனை | 200.00 | 400.00 |
| | 56.தேங்காய் விற்பனை | 50.00 | 100.00 |
| | 57.கேஸ் சிலிண்டர் சேகரிப்பு | 150.00 | 300.00 |
| | 58.சில்க் பாலியஸ்டர் சேலைகள் சில்லரை விற்பனை (ஜவுளி) | 50.00 | 100.00 |
| | 59.சில்க் பாலியெஸ்டர் சேலைகள் மொத்த விற்பனை (ஜவுளி) | 100.00 | 200.00 |
| | 60.பழங்கள் பழுக்க வைக்க | 100.00 | 200.00 |
| | 61.பிறப்பு / இறப்பு சான்று 1-க்கு | 30.00 | 200.00 |
| | 62.ஒவ்வொரு கூடுதல் சான்றுக்கு | 20.00 | 200.00 |
| | 63.மேற்கொண்டு ஒவ்வொரு ஆண்டிற்கும் (தேடுதல் கட்டணம்) | 10.00 | 20.00 |
| | 64.திருமண மண்டபத்தில் 500 நபர்களுக்குள் உணவு அருந்தும் சிறிய திருமண மண்டபம் | 500.00 | 1000.00 |
| | 65.திருமண மண்டபத்தில் 500 நபர்களுக்கு மேல் உணவு அருந்தும் பெரிய திருமண மண்டபம் | 750.00 | 1500.00 |
| | 66.பியூட்டி பார்லர் சிகை அலங்காரம் | 150.00 | 300.00 |
| | 67.ஜெனரல் ஸ்டோர் எழுதுபொருட்கள் காகிதம் நோட், | 200.00 | 400.00 |
| | 68.இரும்பு பொருட்கள் சேகரித்தல் (அ) விற்பனை | 200.00 | 400.00 |
| | 69.பெனிட் சேகரித்தல் (அ) விற்பனை | 200.00 | 400.00 |
| | 70.எவர்சில்வர், அலுமினியம், பித்தளை | 300.00 | 600.00 |

| | | | |
|---|---|---|---|
| | பாத்திரங்கள் தயாரித்தல் (ம) விற்பனை | | |
| | 71. மொசைக்கல் பாலிஷ் போடுதல் | 200.00 | 400.00 |
| | 72.மின்சார சாமான்கள் சேகரிப்பு, விற்பனை | 200.00 | 400.00 |
| | 73.பிரின்டிங் பிரஸ் கம்பியூட்டர் மற்றும் பேனர் தயாரிப்பு | 300.00 | 600.00 |
| | 74.அட்டைகள் தயாரிப்பு, விற்பனை | 200.00 | 400.00 |
| | 75.குளிர் பானம் தயாரித்தல், விற்பனை | 100.00 | 200.00 |
| | 76.கருவாடு கடை | 100.00 | 200.00 |
| | 77.மீன் கடை | 200.00 | 400.00 |
| | 78.சிமெண்ட் சேமிப்பு மற்றும் விற்பனை | 200.00 | 400.00 |
| | 79.அப்பளம் தயாரிப்பு விற்பனை | 100.00 | 200.00 |
| | 80.தள்ளுவண்டியில் இனிப்பு காரம் விற்பனை | 100.00 | 200.00 |
| | 81.வாடகைக்கு சமையல் பாத்திரம் சேகரம் செய்யும் இடம் | 200.00 | 400.00 |
| | 82.மாட்டு தீவனம், கோழி தீவனம் விற்பனை | 150.00 | 300.00 |
| | 83.நெல் வேகவைத்தல் | 100.00 | 200.00 |
| | 84.மின்சாரத்தால் நெல் வேகவைத்தல் (பாய்லர்) | 200.00 | 400.00 |
| | 85.அரிசியில் கல் பிரித்தெடுக்கும் இயந்திரம் 1–க்கு | 100.00 | 200.00 |
| | 86.ஆட்டோ உதிரி பாகங்கள் விற்பனை | 200.00 | 400.00 |
| | 87.ஜெராக்ஸ் கடை | 200.00 | 400.00 |

திருவத்திபுரம்,
2023 மார்ச் 21.

கி. இரகுராமன்,
*ஆணையாளர்,*
*திருவத்திபுரம் நகராட்சி.*

தமிழ்நாடு அரசு எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை இயக்குநரால் விருத்தாசலம் அரசினர் கிளை அச்சகத்தில் அச்சிடப்பட்டு மாவட்ட ஆட்சியரால் வெளியிடப்பட்டது.